Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals — since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

**“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”**

## GOAL 2016-2017

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Jul. 16 : 969 Nos.
  - Up to Jun. 16 : 966 Nos.
- **Performance Jul. 16 …**
  - Turnover growth : 9.75%
  - Employment growth : 0.54%
  - 100% Attendance : 10.86 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano® (Innovation In Inert Metals) – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil (Results for environment) – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen™ Go Green – HHO Generators
- Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculum)

## ACHIEVEMENT CHART




## நவீன வசதிகளே சந்தோஷம்

அந்த சிறுகுருவிக்கு அன்று ஒரு அழகிய கனவு வந்தது. கனவில் மிக அழகான ஒரு உலகம் தெரிந்தது. இதுவரை குருவி அப்படியொரு அற்புத உலகத்தைப் பார்த்ததில்லை. வண்ணவண்ண விளக்குகள், அழகான நதிகள், மரங்கள், எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி என்று அந்த அற்புத உலகம் மயக்கியது.

எப்படியாவது அந்த உலகத்துக்குப் போயே ஆக வேண்டும். அந்த சந்தோஷங்களை அனுபவித்தே ஆக வேண்டும் என்று அந்த குருவி விரும்பியது. ஆனால் போகும் வழிதான் அதற்குத் தெரியவில்லை. அது பறந்து போகும்போது ஒரு பிரபல ஜோதிடரைப் பார்த்தது... காலத்தையெல்லாம் கணிக்கும் ஜோதிடருக்கு அந்த அற்புத உலகத்துக்கான வழி தெரியாதா என்ன. அவரிடம் குருவி வழி கேட்டது. “எனக்கு முழு விபரம் தெரியாது. தெரிந்தவரை சொல்கிறேன். அதற்கு விலையாக நீ உன் சிறகுகளில் ஒன்றைத் தர வேண்டும்” என்றார் ஜோதிடர்.

ஒரேயொரு சிறகுதானே என்று குருவியும் சரி என்றது. குருவி அவர் சொன்ன வழியில் பறந்து சென்றது. குறிப்பிட்ட இடத்துக்கு மேல் அது வழி தெரியாமல் திகைத்து நிற்க, அந்த வழியே ஒரு பாம்பு வந்தது. பாம்பிடம் குருவி தன் கனவு பற்றி சொல்லி, “அந்த உலகத்தின் சந்தோஷங்களை அனுபவிக்க நான் அங்கே போகிறேன். எனக்கு வழி காட்டேன்” என்றது.

பாம்பு “இங்கிருந்து அந்தப் பகுதிக்குச் செல்லும் வழி ஓரளவுக்குத் தான் எனக்குத் தெரியும். சொல்கிறேன். பதிலுக்கு நீ எனக்கு என்ன தருவாய். உன் அழகான சிறகில் ஒன்றைத் தந்து விடு” என்றது. இன்னொரு சிறகுதானே, தந்தால் போச்சு என்று குருவியும் சம்மதித்தது. பாம்பு சொன்ன பாதையில் குருவி பயணிக்க, அதுவும் ஓரளவுக்குத்தான் போக முடிந்தது. அதற்குப் பிறகு வழி தெரியவில்லை.

இப்படியே அந்தக் குருவி, அங்கங்கே இருந்த சிலரிடம் வழி கேட்டுகேட்டு பறந்தது. அவர்களும் வழி சொல்லிவிட்டு குருவியிடம் இருந்து ஒரு சிறகை விலையாக கேட்டார்கள். குருவியும் அந்த அற்புத உலகின் சந்தோஷங்களை அனுபவிக்கப் போகும் ஆசையில் வழி சொன்னவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு சிறகாக பிய்த்துக் கொடுத்தபடி சென்றது.

முடிவாக, அதோ… கனவில் கண்ட அந்த அழகான உலகம் அதன் கண்முன் தெரிந்தது. வந்து விட்டோம்… வந்தே விட்டோம்… இன்னும் சில நூறடி தூரம் பறந்தால் அந்த அற்புத உலகம். குருவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஆனால், இதென்ன… ஏன் என்னால் பறக்க முடியவில்லை. ஐயோ, என் உடம்பெல்லாம் கனக்கிறதே. கீழே இருந்து காற்றில் எழும்பவே முடியவில்லையே என்று கதறியது.

மெல்ல மெல்ல குருவிக்குப் புரிந்தது. பறப்பதற்கான சிறகுகள் தன்னிடம் இப்போது இல்லை என்ற உண்மை விளங்கியது. குருவியால் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. இதோ கண் முன்னே தான் கனவில் கண்ட அந்த அற்புத உலகம்.

## FUNCTIONAL WISHES



Vinayakar Chathurthi
5th September



Thiruvonam
14th September

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. C. Baskaran** — **01st Sep.**
Purchase

**Mr. D. Karunakaran** — **01st Sep.**
Fib Tec

**Mr. V. Gokula Krishnan** — **06th Sep.**
Fib Tec

**Mr. M. Chinna Thambi** — **16th Sep.**
Coating

**Mr. K. Suresh kumar** — **19th Sep.**
Production

**Mr. S. Dinoy** — **29th Sep.**
Coating

**Best Wishes from Tiaano Employees**

1. நம்பிக்கையும், தைரியமும்
வெற்றிக் கிரீடத்தின் இரு
ஒளிமிகு வைரங்கள்
2. வாழ்க்கை பரிசோதிப்பதற்காக
இல்லை. சாதிப்பதற்காக
3. நம்பிக்கையே நம் வாழ்வு.
அது என்றும் வெற்றி தரும்.

ஆனால் அதை அனுபவிக்க முடியாமல் கீழே கிடக்கிறேன். அந்த சோகமும் ஏக்கமும் தாங்க முடியாமல் எட்டாத உயரத்தில் தெரியும் அந்த மாயஉலகின் வாசலை பார்த்தபடியே பரிதவித்துக் கொண்டிருந்தது. அந்தக் குருவி. இன்று நம்மில் பலரது நிலைமையை குறிப்பிடும் அற்புத கதை இது.

“நவீன வசதிகளே சந்தோஷம்” என்று அந்த மாய உலகின் வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக இன்றைய நம் சந்தோஷங்களை இழந்து கொண்டிருக்கிறோம். குடும்பத்துடன் வெளியே செல்வது, பிள்ளைகளோடு மனம் விட்டுப் பேசுவது, பிடித்த புத்தகம் படிப்பது, பிடித்த படம் பார்ப்பது, பிடித்த கோவிலுக்கு போவது, பிடித்த உடை உடுத்துவது, பிடித்த உணவு உண்பது என்று எல்லா சந்தோஷ சிறகுகளையும் ஒவ்வொன்றாக வெட்டி வெட்டி வீசுகிறோம்.

கடைசியில் அந்த வசதிகளை அனுபவிக்கும் ஒரு நிலை வரும்போது நரை கூடி, திரை வந்து உடலும் மனசும் தளர்ந்து போகிறது. எல்லாம் இருந்தும் அனுபவிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. “மகிழ்ச்சி என்பது வசதிகளில் இல்லை. நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் இருக்கிறது. ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வாழ்வோம்.”

*Compiled By : Ms. P. E. Nancy*
Director - Admin

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

கல்லுடைக்கும் வேலை அவனுக்கு. ஒரு வணிகரின் மாளிகையைக் கடந்து போகும் போதெல்லாம் பெருமூச்சு விடுவான். “நானும் வணிகனாய் இருந்தால் வசதியாய் வாழலாமே”. கொஞ்ச நாட்களில் வணிகன் ஆனான். ஓர் அதிகாரியைக் கண்டால் வணிகர்கள் பயந்தார்கள். அதிகாரியாக நினைத்தான். ஆகிவிட்டான். பிறகு அந்த அதிகாரம் போதவில்லை. மக்கள் வரி கொடுக்கவில்லை. மழை இல்லை என்றார்கள். மழைதான் உயர்ந்தது என்று கருதி தவம் செய்து மேகமானான். மேகத்தை காற்றுக் கலைத்தது. காற்றாய் ஆனான். காற்று எல்லாவற்றையும் அசைத்தது... கல்லைத்தவிர. கல்தான் பலமானது என்று கருதிக் கல்லாய் ஆனான். அந்தக் கல்லை ஒருவன் உளி கொண்டு உடைக்கக் கண்டு மீண்டும் கல்லுடைக்கப் போனான்”.

தன் தொழிலை பெருமிதத்தோடு செய்வதே சக்தி-அதிகாரம்-ஆளுமை எல்லாமே.

– கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### Think twice before you speak

Once there lived a blind man in a small town. He always carried a lighted lamp in his hand whenever he went out at night. On one dark night he was going with his lighted lamp in his hand.

A group of men were passing that way. They saw the blind man and made fun of him. They said, "O Blind man why do you carry the lighted lamp. You are blind and cannot see anything.

## தெரிந்து கொள்வோம்



ஒரு சோற்றுப் பருக்கையின் மதிப்பு சிதறவிட்ட நமக்கு தெரியாது. அதை எடுத்துச் செல்லும் எரும்புக்குத் தான் தெரியும்.

*Compiled By : Mr. M. Sivakumar*
Marketing

## மாதாந்திர மருந்து செலவை 30% லிருந்து - 80% வரை சேமியுங்கள்

**Generic Medical Shops**

Contact:
Bharat Vikas Parishad Jana Seva Trust
224/2A, R. K. Mutt Road, Mandaveli,
Chennai – 600028 (Near Canara Bank)
Ph: 044 2173660
Email: genmed.bvp@gmail.com.

## ஒரு வாரம் தொடர்ந்து தேங்காய் தண்ணீர் குடித்தால் நிகழும் மாற்றங்கள்

- தேங்காய் தண்ணீர் மிகவும் சிறப்பான, உடலை சுத்தப்படுத்தும் பானங்களுள் ஒன்று.
- தேங்காய் தண்ணீரைக் குடிப்பதன் மூலம் நோயெதிர்ப்பு மண்டலம் வலிமைப் பெறுவதோடு, ஈறுநோய்களை ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் மற்றும் காய்ச்சல், சளி, இருமலை ஏற்படுத்தும் வைரஸ்களையும் தேங்காய் தண்ணீர் அழித்து வெளியேற்றிவிடும்.
- தேங்காய் தண்ணீரை எவ்வளவு குடித்தாலும், உடலில் கொழுப்புக்கள் சேராது.
- தைராய்டு பிரச்சனை உள்ளவர்கள், தேங்காய் தண்ணீர் குடித்து வந்தால், உடலின் ஆற்றலை அதிகரிப்பதோடு, தைராய்டு ஹார்மோன்களின் உற்பத்தியை அதிகரித்து, தைராய்டு சுரப்பி சீராக செயல்பட வழிவகுக்கும்.

*Compiled By : Mrs. P. Seevajothi*
Design

The blind man politely said, This lamp is not for me, but for you people who have eyes. You may not see a blind man coming and push him. They felt ashamed and begged pardon.

*Compiled By : Ms. P. Nirmala Devi*
Finance

## தாழ்வு மனப்பான்மை

தன்னைப் பற்றி தாழ்வு மனப்பான்மை கொண்ட ஒருவன் கடவுளை வேண்டி தவமிருந்த பின் அவன் முன்னே கடவுள் தோன்றினார். அவன் கடவுளிடம் என்னை ஏன் இப்படி படைத்தீர்கள்?. என் வாழ்க்கையின் மதிப்புதான் என்ன என்று கேட்டான். கடவுள் அவனிடம் ஒரு சிகப்பு கல்லை கொடுத்து இதன் மதிப்பை அறிந்துவா. ஆனால் விற்கக்கூடாது என்றார்.

அவன் அக்கல்லை ஒரு ஆரஞ்சு பழ வியாபாரியிடம் காண்பித்ததற்கு, அக்கல்லுக்கு பதில் ஒரு டஜன் ஆரஞ்சு பழங்கள் கொடுப்பதாக கூறினான். அதையே ஒரு உருளைக்கிழங்கு வியாபாரியிடம் கேட்டதற்கு ஒரு மூடை கிழங்கு தருவதாக சொன்னான்.

நகைக்கடையில் காண்பித்ததற்கு 50000 பொற்காசுகள் தருவதாக சொல்லவே, இவன் மறுக்க, ஒரு லட்சம் பொற்காசுகள் தருவதாக சொன்னான். மீண்டும் அந்த கல்லை எடுத்துக் கொண்டு ஆபரண கற்கள் வியாபாரியிடம் காண்பித்து அதன் மதிப்பை கேட்டான். அக்கல்லை வாங்கி பல முறை பரிசோதித்து விட்டு இந்த அருமையான மாணிக்க கல் உனக்கு எங்கே கிடைத்தது?.

ஒட்டு மொத்த உலகத்தையே விற்று கொடுத்தாலும் இந்த கல்லுக்கு ஈடு இணை இல்லை என்று கூறினார். குழப்பமடைந்த நம் நண்பன் கடவுளை பார்த்து நடந்ததை எல்லாம் கூறினான். அதற்கு கடவுள் சொன்னார். பார்த்தாயா?. ஒரே கல்லுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதிப்பு கொடுத்தனர். ஆனால், கடைசியாக அந்தக் கல்லின் உண்மையான மதிப்பை ஒருவர் தான் சொன்னார்.

அதே போல் உன்னை ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி குறைத்து மதிப்பீடு செய்வர். அதற்கெல்லாம் கவலைப்படாதே! உன் உண்மையான மதிப்பை அறிபவரை விரைவில் கண்டறிவாய். மனம் தளராதே! என்று கூறி மறைந்தார். கடவுளின் படைப்பில் ஒவ்வொருவரும் அபூர்வமானவரே!. தாழ்வு மனப்பான்மை கொள்ளல் கூடாது!. நம்மைப் பற்றி உயர்ந்த எண்ணம் நமக்கு முதலில் வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் சிறப்பு மிக்கவரே! உங்களுக்கு நிகர் நீங்களே! யாரும் உங்களுக்கு இணை கிடையாது!.

*Compiled By : Mr. C. Abilash*
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி LVI)

**மின்னும் சுத்தம்**

இதன்படி, ஒவ்வொருவரும் தங்களுடைய பணியிடத்தை முடிந்தவரை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இயந்திர பாகங்களிலோ, அவற்றைச் சுற்றியிருக்கும் பகுதிகளிலோ எந்தவிதமான அழுக்கு அல்லது தூசுக்கும் இடமளிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எல்லாருடைய கடமை.

ஒரு தொழிற்சாலையைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் அப்படி என்ன பெரிய நன்மை இருந்துவிடப் போகிறது?

## கவிதைகள்

### முன்னுக்குப் பின்

வெற்றிக்குப் பின் தோல்வி
என்றால் முயற்சி இல்லை
முயற்சிக்குப் பின் வெற்றி
என்றால் தோல்வி இல்லை.

ஆசைக்குப் பின் அடிமை
என்றால் அன்பு இல்லை
அன்புக்குப் பின் அடிமை
என்றால் அழிவே இல்லை.

சிரிப்பிக்குப் பின் அழுகை
என்றால் நிரந்தரம் இல்லை
அழுகைக்குப் பின் சிரிப்பு
என்றால் ஆணவம் இல்லை.

பணத்திற்குப் பின் குணம்
என்றால் சொந்தம் இல்லை
சொந்தத்திற்குப் பின் பணம்
என்றால் எதுவும் இல்லை.

*Compiled By : Mrs. C. Bavani*
*Administration*

### நட்பு

உனக்காக துடிக்கும் இதயத்தை விட
உன் நலனுக்காக துடிக்கும் இதயமே
உன் உண்மையான நட்புக்கு சொந்தம்.

### வாழ்க்கை

பூமிக்கடியில் இடம் பிடிக்க
பூமிக்கு மேல் நடக்கும்
போராட்டம் தான்
வாழ்க்கை...

*Compiled By : Mrs. R. Jayanthi*
*Marketing*

## ஹைக்கூ

உன் மனம் நோகும் போது சிரி!!!

பிறர் மனம் நோகும் போது சிரிக்கவை!!!

## சிந்தனைக்கு

நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால்
உங்கள் விழிகளைக் கண்ணீரால்
நிரப்பாதீர்கள்!
உங்கள் கண்ணீர்,
உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை
மறைத்துவிடும்!
அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்!

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இப்படிக் கேள்வி கேட்கிற மனப்பான்மையே தவறு என்கிறது செய்சோ. ஏனெனில், சுத்தம் என்பது எங்கிருந்தோ வந்து குதிக்கிற விஷயம் அல்ல. நம்மைச் சுற்றிலும் இருக்கிற இயல்பான ஒன்றுதான். அதன்மீது குப்பைகளை வீசி அசுத்தமாக்குவதுதான் நம்முடைய தவறு. அதை நாம் சரி செய்தாக வேண்டும். இதில் கேள்விகளுக்கே இடம் இல்லை!

ஆகவே, தொழிற்சாலையைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் என்ன லாபம் என்று கணக்குப் போடாமல், அதை அசுத்தமாக வைத்துக் கொள்வதால் என்னவெல்லாம் நஷ்டம் என்று வேண்டுமானால் பட்டியல் போடலாம்.

முதலாவதாக, அழுக்கான ஓர் இடத்தில் பணிபுரிவதை யாரும் பெருமையாக நினைப்பதில்லை. தங்களது நண்பர்கள் அல்லது உறவினர்களை அழைத்துவந்து, தங்களுடைய பணியிடத்தைக் காண்பித்து, 'தினந்தோறும் இந்தக் குப்பைக் கூளத்தின் மத்தியில் நின்றுகொண்டுதான் நான் வேலை செய்கிறேன்' என்று சொல்வதற்கு யாரேனும் விரும்புவார்களா?

இப்படி வேண்டா வெறுப்பு மனோபாவத்துடன் செயல்படுகிற தொழிலாளர்கள், தங்களையும் அறியாமல் எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். வேலையில் கவனம் குறைகிறது. ஆலையின் ஒட்டுமொத்தச் செயல்திறன் சரிகிறது.

இதற்கு நேரெதிராக, சுத்தமான, 'செய்சோ' மொழியில் சொன்னால், பளபளப்பாக மினுமினுக்கும் ஒரு பணியிடம், தொழிலாளர்களிடையே தன்னம்பிக்கையை ஊட்டுகிறது. அவர்களுக்குள் சுறுசுறுப்பு தானாக அதிகரிக்கிறது.

தொழிற்சாலைகளை விடுங்கள். நம் வீட்டிலேயே, சுத்தமான ஓர் அறைக்குள் நுழையும்போது நாம் உற்சாகமாக உணர்கிறோம். அசுத்தமான, குப்பை நிறைந்த அறைகளுக்குள் செல்லத் தயங்குகிறோம், இல்லையா?

தொடரும்...

### Titanium Basket Strainer

